1. நிதிக்கூற்றுக்கள்

1.1 மறுப்பு அபிப்பிராயம்

கொழும்பு மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அதிகாரம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க கொழும்பு மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுப்பிற்குள்ளாக்கப்படுகின்றது.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மாநகர சபையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வை மேற்கொண்டு கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது

பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(இ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் 1.6.2(ஆ), (இ) மற்றும் 1.6.4 (ஆ) அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.29 ஆம் பந்தியின் பிரகாரம் முதலீட்டு செயற்பாடுக ளிலிருந்து கிடைத்த காசுப் பாய்ச்சல் கணிப்பீட்டின் கீழ் நிலையான சொத்துக்கள் கைப்பற்றல் அல்லது நிர்மாணம் என ரூபா 2,727,756,460 காசு வெளிப் பாய்ச்சலாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் கணக்கீட்டு முறைமையின் தகவல்களின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் கைப்பற்றுவதற்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 1,342,268,824 ஆகும்.	காசுப்பாய்ச்சல் கூற்றில் சரியாக கணிப்பிடப்பட்டு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நியமத்திற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத் தின் 3.30 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளின் கீழ் காசுப்பாய்ச்சல் கணிப்பிடும் போது பின்வரும் வழுக்கள் காணப்பட்டது.		
(i)	கணக்கீட்டு முறைமையில் பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் ஆண்டின் மூலதன நிதிக் கிரயம் ரூபா 202,874,003 காண்பிக்க வேண்டிய போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 200,017,180 ஆக ரூபா 2,856,823 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	காசுப்பாய்ச்சல் கூற்று மீண்டும் சமர்ப்பிக்கும் போது சரியாக சமர்ப்பிப் பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நியமத்திற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும்.
(ii)	நிதிச் செயற்பாடுகளிலிருந்து கிடைத்த காசுப்பாய்ச்சலின் கீழ் ஆசிய அபிவிருத்தி	எதிர்காலத்தில் சரியான தகவல்களை காண்பித்து	நியமத்திற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று

	வங்கி கடன் தவணைப் பணம் செலுத்து தலாக ரூபா 201,632,574 காசு வெளிப் பாய்ச்சலாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் போது ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் பணம் தீரத்து வைப்பதற்காக செலுத்தப்பட்ட தொகை ரூபா 100,816,287 ஆகும்.	நிதிக் கூற்றுக்களில் உள்ள தாக்கங்களை சரியாக இனங் கண்டு காசுப்பாய்ச்சல் கூற்றுக்களில் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	தயாரிக்கப்படல் வேண்டும்.
(இ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.32 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக் கைகளிலிருந்து கிடைத்த தேறிய காசுப் பாய்ச்சலை கணிப்பிடும் போது பின்வரும் வழுக்கள் காணப்பட்டது.		
(i)	செலுத்த வேண்டியவைகளாக ரூபா 392,519,862 குறைத்துக் காண்பிக்கப்பட்ட போதும் அப்பெறுமதியில் நிலையான சொத்துக்கள் கடனுக்கு பெறல் மற்றும் செலுத்த வேண்டிய ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் தவணைப் பணம் மற்றும் கடன் வட்டியை உள்ளடக்கியிருந்தமை யால் அது ரூபா 392,519,862 தொகை குறைத்து காண்பித்தல் பிழையானது ஆகும்.	சரிசெய்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நியமத்திற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும்.
(ii)	மீளாய்வாண்டின் விரிவான வருமானக் கூற்றில் நிதிக் கிரயம் ரூபா 184,146,950 ஆகக் காண்பிக்கப்பட்ட போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் மிகையில் மேற்கொள் ளப்பட்ட சீராக்கத்தின் கீழ் ரூபா 19,272,887 காண்பித்து நிதி செயற்பாடு களிலிருந்தான காசுப்பாய்ச்சலின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாக ரூபா 184,165,950 காண்பிக்கப்பட்டிருந்தது.	பதிலளிக்கப்படவில்லை.	நியமத்திற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும்.
(iii)	காசுப்பாய்ச்சல் கூற்றில் காலப் பகுதிக்கான மிகையில் மேற்கொள்ளப் பட்ட சீராக்கத்தின் கீழ் மூலதன நிதிக் கிரயமாக ரூபா 201,632,374 காண்பிக்கப் பாட்ட போதும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் பணத்தின் வட்டி தீர்ப்பதற்காக பொதுத் திறைசேரிக்கு செலுத்தப்பட்ட தொகை ரூபா 93,511,307 ஆகும்.	வட்டிப் பெறுமதி சரியாக இனங்கண்டு காசுப் பாய்ச்சல் கூற்றின் மூலம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நியமத்திற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும்.
(iv)	காசுப்பாய்ச்சல் கூற்றில் காலப் பகுதிக் கான மிகையில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கத்தின் கீழ் மிகையின் பற்றாக்குறை கணக்கில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கமாக ரூபா 2,834,619 குறைத்து	பதிலளிக்கப்படவில்லை.	நியமத்திற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும்.

	காண்பிக்கப்பட்டதுடன் மிகையின் பற்றாக்குறை கணக்கின் பெறுவனவு கொடுப்பனவு அறிக்கையிடுகின்ற கணக்கல்லாதிருந்தமையால் அவ்வாறு காண்பித்தல் பிழையானதாகும்.		
(v)	காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன விடயத்தின் முடிவுறாதவைகளின் கீழ் செலுத்த வேண்டிய குறைத்தல்கள் ரூபா 859,783,815 காண்பிக்கப்பட்ட போதும் 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்றின் பிரகாரம் செலுத்த வேண்டிய வைகளின் குறைவு ரூபா 381,765,655 ஆகும்.	பதிலளிக்கப்படவில்லை.	நியமத்திற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஈ)	நியமத்தின் 4 ஆம் அத்தியாயத்தின் 4.14 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய காலப் பகுதியில் ஏற்பட்ட தவறுகளின் தன்மை நிறுவனம் ஒன்றினால் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் முன்னைய காலப் பகுதி தொடர்பான தவறுகளுக்கான சீராக்கங்கள் ரூபா 21,160,932 உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் சீராக்கப்பட்டிருந்த போதும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டி ருக்கவில்லை.	வெளிப்படுத்துதல் தொடர்பான விரிவான தகவல்கள் பட்டோலையின் பிரகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு எதிபார்க்கப்பட்டுள்ளது.	நியமத்திற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	கணக்காய்வு ஐயவினா மற்றும் கணக்காய்வு அறிக்கையின் மூலம் கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமான 168 காணிகள் காணப் பட்டமைக்கான விடயங்கள் அறிக்கையிடப்பட்ட போதும் மாநகர சபையின் காணிப் பிரிவினால் உள்ளபடியாக 132 காணிகள் மாநகர சபைக்குச் சொந்தமாக இருப்பதாக இனங் கண்டு அறிக்கையிடப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த 132 காணிகளுக்கிடையே 27 காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு ரூபா 20,951,855,000 பெறுமதியொன்று புத்தகங்களுக்கு கொண்டு வந்து காணி பதிவேட்டு தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்ட போதிலும் 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு மேலும் 105 காணிகள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்காதிருந்தமையால் கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமான	மதிப்பீடு செய்யப்பட்ட 27 காணிகள் மற்றும் அவற்றில் அமைந்துள்ள காணிப் பதிவேடை தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட துடன் காணிகளை அளவிட்டு புதிய நிலவரை படத் தைப் பெற்று ஒழுங்குமுறையின் பிரகாரம் மதிப்பீட்டுப் பெறுமதி காணிப் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	சகல காணிகளினதும் உரித்தை உறுதிப் படுத்திய பின்னர் மதிப்பீடு செய்தல் மற்றும் காணிப் பதிவேடை பராமரித்தல் வேண்டும்.

	காணிகளின் உள்ளபடியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.		
(ஆ)	2023 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் ஆசிய அபிவிருத்தி வங்கி கடனனின் அமுல்படுத்தப்பட்ட கழிவு நீர் முகாமைத் துவ முறைமையினை அபிவிருத்தி செய்யும் 03 செயற்திட்டங்களின் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்படாதிருக்கும் போது செயற் திட்டம் மூடப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மொத்த செயற்திட்டத்தின் கிரயம் ரூபா 24,634,150,460 ஆகும். இந்த செயற்திட் டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த சொத்துக்கள் மாநகர சபையினால் பயன்படுத்தப்படுவதுடன் 04 பம்பிக்கூடங்களை உள்ளக்கிய மலம் அகற்றும் தொகுதிகள் பயன்படுத்திய போதும் அந்த சொத்துக்கள் நகர சபைக்கு கையேற்று சொத்துப் பதிவேட்டில் நாளதுவரையாக்குதல் மற்றும் கிரயத்தைக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் செயற்திட்டத்தின் மொத்த முதலீடு தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவும் இல்லை.	மீளாய்வாண்டின் போதும் மீண்டும் கணக்குகளைச் சரி செய்து நிதிக் கூற்றுக்களின் மூலம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வெளிநாட்டு செயற் திட்டத்தை முடிவுறுத்தும் கணக்குகளைத் தயாரித்தல், சொத்துக்களை சரியாக கையேற்றல் மற்றும் பெறுமதிகளை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2022 ஆம் ஆண்டின் போது அரச நிருவாக மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சில் இருந்து கொழும்பு மாநகர சபைக்கு கையளிக்கப்பட்ட ரூபா 2,355,300,000 ஆன 13 தீயணைக்கும் வண்டிகள் மற்றும் முன்னைய ஆண்டுகளில் கையளிக்கப்பட்ட மோட்டார் வாகனங்களும் 2023 ஆம் ஆண்டில் கிடைத்த ரூபா 4,500,000 ஆன மோட்டார் வாகனத்திற்காகவும் மீளாய் வாண்டின் போது செலவினமாக இனங் காணவேணடிய ரூபா 94,734,000 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டு முதல் சரிசெய்து கணக்குகளை சமர்ப் பிப்பதற்கு நடவ டிக்கை எடுக்கப்படு வதுடன் மீளாய்வாண்டின் போது பெறுமானத் தேய்வு செய்யப்படாதிருந்தமை யால் பெறுமானத் தேய்வும் செய்யப்பட திருந்ததுடன் அது தொடர்பான வெளிப்ப டுத்தல் நிதிக்கூற்றுக்களின் மூலம் மேற்கொள்ளப்படும்.	கணக்கீட்டு கொள்கையின் கீழ் ஏற்றுக் கொள்ளப்பட்ட விகிதத்தின் பிரகாரம் உரிய பெறுமானத் தேய்வு ஒதுக்கீடுகள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நிதிக்கூற்றுக்கள் தொடர்பான வரைவின் பொழிப்பு அறிக்கை விநியோகிக்கப்பட்ட பின்னர் 12 நாட்குறிப்புக்களின் மூலம் 07 கணக்குகளுக்கு ரூபா 13,442,951,253 வரவு வைத்தலும், 10 கணக்குகளில் செலவு வைத்தலும் மேற்கொள் ளப்பட்டமை கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்ட	பதிலளிக்கப்படவில்லை.	சகல சீராக்கங்களும் கணனி கணக்கீட்டு முறைமையில் சரியாக கணக்கீடு

	போதும் கணனி கணக்கீட்டு முறைமையில் பேரேட்டுக் கணக்கில் அதன் பிரகாரம் நாளதுவரையாக்காமையின் காரணமாக கணக்கீட்டு முறைமை மற்றும் நிதிக்கூற்றுக்க ளுக்கிடையே அப்பெறுமதிகளில் இணக்கம் செய்யப்படாத மீதிகள் காணப்பட்டது.		செய்யப்படல் வேண்டும்.
(ஆ)	நிலையான சொத்துக்களின் மொடியுலில் காணப் படுகின்ற மீதிகளின் பெறுமதிக்கும், நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளின் பெறுமதிக்கும் இடையே ரூபா 64,531,258,430 வேறுபாடு காணப்பட்டது.	முறைமையை நாளதுவரையாக்குவத ற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வழுக்களை இனங்கண்டு சரிசெய்யப்படல் வேண்டும்.
(இ)	நகர ஆய்வுகூடம் மற்றும் நகர ஆய்வுகூடத்திற் குரிய களஞ்சியங்கள் இரண்டிலும் கணனி முறைமையின் பிரகாரம் மீதி ரூபா 132,144 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி ரூபா 10,243,122 ஆனமையால் ரூபா 7,110,978 வேறுபாடு காணப்பட்டது.	நகர களஞ்சியப் பிரிவில் தனிப்பட்ட மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் களஞ்சிய மீதி எதிர்காலத்தில் சரிசெய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும்	இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் சரிசெய்யப்படல் வேண்டும்.
(ஈ)	நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மொத்த வருமானம் ரூபா 15,538,428,829 ஆக இருந்த போதும் கணக்கீட்டு முறைமையின் பிரகாரம் மொத்த வருமானம் ரூபா 44,291,547,271 ஆனமையால் ரூபா 28,753,118,442 வேறுபாடு அவதானிக்கப் பட்டது.	எதிர்வரும் ஆண்டில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் சரிசெய்யப்படல் வேண்டும்.

1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**சபையின் கருத்துரைகள்**	**பரிந்துரைகள்**
(அ)	2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 558,212,710 ஆன களஞ்சியம் மற்றும் அலுவலகம் மற்றும் ஆய்வுகூடம் மற்றும் எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் காணப்படுகின்ற இருப்புக்கள் தொடர்பான மெய்மை ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் இருப்புப் பெறுமதியில் உள்ளடக்கப்படாமையால் இருப்பின் பெறுமதியை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது. மெய்மை ஆய்வு அறிக்கை 2018, 2019 ஆம் ஆண்டுகள் முதல் கொண்டுவரப்	எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இருப்பு பெறுமதியை உள்ளடக்கி மெய்மையாய்வு அறிக்கை தயாரிக்க வேண்டியிருந்ததுடன் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இருந்து கொண்டுவரப்ப டுகின்ற விற்றுத் தீர்ப்பதற்கு உத்தேசிக்கப் பட்ட காலாவதியாகிய மற்றும் அழிவடைந்த இருப்புக் களை விற்றுத் தீர்த்து இருப்புப் பெறுமதியை

	படுகின்ற விற்றுத்தீர்ப்பதற்கு முன்மொழியப்பட்ட காலாவதியாகிய மற்றும் அழிவடைந்த இருப்புக்களையும் உள்ளடக்கி காணப்படுகின்றமையால் இருப்பு பெறுமதிகள் பிழையாக இருந்தமை கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டது.		உறுதிப்படுத்துதல் வேண்டும்.
(ஆ)	2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு சொத்துக்கள் மற்றும் பொறுப் புக்கள் கூற்றில் குறிப்பிடப்பட்ட கூட்டுப் பெறுமதி ரூபா 24,112,940,597 ஆன 07 சொத்து தொகுதிகளின் கீழ் அறிக்கை யிடப்பட்டுள்ள சொத்துக்கள் தொடர்பாக சொத்துப் பதிவேடு, மெய்மையாய்வு சபை அறிக்கை மற்றும் விரிவான பட்டோலைகள் போன்ற சான்றுகள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை.	கணக்காய்வின் போது சுட்டிக்காட்டப்பட்ட மற்றும் தனிப்பட்ட மீதிகளிலுள்ள வழுக்களை சரி செய்வதற்காக 2025 ஆம் ஆண்டின் போது விரைவாக நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க் கப்படுவதுடன் அதன் பிரகாரம் கணக்குகளைச் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துப் பதிவேடு மற்றும் பட்டோலை கள் நாளதுவரையாக பேணிச் செல்லப்படல் வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டில் காணி கைப்பற்றுவதற்காக கூட்டுமொத்தமாக ரூபா 215,220,335 செலுத்தப்பட்டிருந்த போதும் கைப்பெற்றப்பட்ட காணியின் அளவு மற்றும் பெறுமதிகளைப் பரீட்சித்து உறுதிப்படுத்துவதற்கு ரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வில்லை. மேலும் இந்தக் காணிகள் தொடர்பான தகவல் களை உள்ளடக்கி காணிப் பதிவேடும் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.	காணிப் பதிவேட்டில் இதுவரை தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை.	கொள்வனவு செய் யப்படுகின்ற சகல காணிகளுக்கும் உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்ததுடன் காணிப் பதிவேடு நாளதுவரையாக்கப் படல் வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 81,514,303 கூட்டுத்தொகையான இயந்தர உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்து விடயங்கள் தொடர்பாக பட்டோலை தயாரித்து நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிப்பதற்கு தவறியமையால் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களின் பெறுமதி களில் சரியான தன்மையை பரீட்சித்து உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.	சுட்டிக்காட்டப்பட்ட ரூபா 81,514,303 இற்குரிய மீதி எதிர்வரும் ஆண்டின் போது திருத்தப்படும்.	சகல கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பாகவும் பட்டோலை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	252 ஆவது அதிகாரம் ஆன மாநகர சபைக் கட்டளைகள் சட்டம்			
	188(உ) பிரிவு	சபையில் கூட்டங்களுக்கு பங்கு பற்றுகின்ற சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு உப சரிப்பதற்கான செலவினத்தை செய்வதற்குள்ள அதிகாரத்தை முறை கேடாகப் பயன்படுத்தி பிழையாக பட்டியல் சமர்ப்பித்து ரூபா 8,443,215 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	நகர பிதாவின் ஆலோசனையின் பிரகாரம் உப சரிப்பு செலவினம் செய்யப்பட்டுள்ளது.	சட்ட விதிகளுக்கு முரணான செலவினங்களை பொறுப்புவாய்ந்த உத்தியோகத்த ரிடமிருந்து அறவிடல் வேண்டும்.
(ஆ)	மாநகர சபைகள் நிதி நிருவாகத்திற்குரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான கட்டளைக்கான 2019 டிசம்பர் 24 ஆம் திகதி இலக்கம் 2155/6 என்ற அதி விசேட வர்த்தமானியின் 62 ஆம் கட்டளை	மாநகர சபை நிதியத்திற்கு நடப்பாண்டின் வருமான மூலங்களான ஆதனங்களை இனங்காண் பதற்கான மெய்மையாய்வு மேற்கொண்டு அதற்குரிய அறிக்கை ஒவ்வொரு வருடமும் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்க வேண்டி யிருந்த போதிலும் சபை அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை.	பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது.	கட்டளையின் பிரகாரம் வருமான மூலங்களான ஆதனங்களை இனங்காணல் வேண்டும்.
(இ)	இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை			
(i)	நிதிப்பிரமாணம் 135	கணக்கீட்டு உத்தியோகத்தர் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல் தொடர்பாகவும் அதிகாரம் வழங்குதல், அங்கீகரித்தல், உறுதிப்படுத் துதல் மற்றும் கொடுப்பனவு செய்தல் போன்ற பணிகள் தமக்கு கீழ் உள்ள உத்தியோகத் தர்களுக்கு	2025 சனவரி 15 ஆம் திகதிய இலக்கம் 1090 என்ற தீர்மானத்தின் பிரகாரம் அதிகாரக் கையளித்தல் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பணிகள் கையளித்து முறைமைப் படுத்துதல் வேண்டும்.

		கையளிக்க வேண்டியிருந்த போதிலும் நகர ஆணையாள ரினால் அவ்வாறு முறையாக பணிகள் ஒப்படைக்கப்பட்டிருக்க வில்லை.		
(ii)	நிதிப்பிரமாணம் 257	கொப்பனவு செய்வதற்காக செலுத்துகின்ற உத்தியோகத் தருக்கு சமர்ப்பிப்பதற்கு முன் சகல உறுதிச்சீட்டுக்களும் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் ரூபா 89,554,448 ஆன 14 கொடுப்பனவு உறுதிச்சீட் டுக்கள் உறுதிப்படுத்தப்பட் டிருக்கவில்லை.	தாமத வழுவினால் உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்பட வில்லை.	சகல கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் உறுதிப் படுத்தப்படுகின்றமை யை சான்றுப்படுத்தும் வகையில் உள்ளகக் கணக்காய்வை வலுப்படுத்துதல் வேண்டும்.
(ஈ)	**அரச நிருவாக சுற்றறிக்கை**			
(i)	1999 ஒக்டோபர் 08 ஆந் திகதிய இலக்கம் 22/99 என்ற சுற்றறிக்கை	உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக உரித் தில்லாத பதவியொன்றான பிரதான மருத்துவ உத்தியோகத்தருக்கு உத்தி யோகபூர்வ வாகனம் வழங்கப்பட்டு மாதாந்தம் எரிபொருள் லீற்றர் 210 ஒதுக்கப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் குழாம் வாகனமாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கை ஆலோசனை யின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய இலக்கம் 09/2009 என்ற சுற்றறிக் கையின் IV ஆம் பிரிவு	மேலதிக நேரம் மற்றும் விடுமுறைதின படிகள் போன்றவை உள்ளபடியான கடமை நேரத்திற்கு பின்னர் செலுத்தப்படுகின்ற படிகளுக்காக காலத்தை அடிப்படை யாகக் கொள்ளுவதாயின் அந்தக் காலம் கைவிரல் அடையாள இயந்திர மூலம் உறுதிப்படுத்த வேண்டியி ருந்த போதிலும் அவ்வாறு அந்த ஆலோசனைகளுக்கு முரணாக பொது சுகாதார திணைக்களத்தின் மூன்று உத்தியோகத்தர்களுக்கு ரூபா 123,754 மேலதிக நேரப்படி செலுத்தப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் குறித்துரைத்த நடைமுறையில் இருந்து விலகாதிருப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	சட்டத்திற்கு முரணாக மேற் கெள்ளப்பட்ட கொடுப்பனவுகள் மீள அறவிடப்படல் வேண்டும்.
(உ)	**திறைசேரி சுற்றறிக்கை**			
(i)	2022 நவம்பர் 25 ஆம் திகதிய இலக்கம் 08/2022 என்ற தேசிய வரவு செலவுத்திட்ட	சகல முறையிலும் விழாக்க ளை நடாத்துவதற்காக அரசங்கத்தின் அல்லது அரசாங்க நிறுவனங்களின் உழைப்புக்கள் பயன்படுத்தி	மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 188(1)(ப) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் செலவினங்கள்	சுற்றறிக்கை ஆலோசனை யின் பிரகாரம்

	சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி	மேற்கொள்ளப்படுகின்ற உப சரிப்பு செலவினங்கள் நிறுத்த வேண்டியிருந்த போதிலும் அந்த ஆலோசனையைக் கவனத்திற்கொள்ளாமல் விழாக்களை நடாத்துவதற்காக சபை நிதி யத்தில் இருந்து ரூபா 2,191,375 பயன்படுத்தப்பட்டி ருந்தது.	மேற்கொள்ளப் பட்டுள்ளது.	நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	கொம்ரோலர் ஜெனராலின் 2022 செப்டெம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 11/2022 என்ற சுற்றறிக்கை மற்றும் 2015 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய இலக்கம் 9/2015 (10)(இ) என்ற மேல் மாகாண பிரதம செயலாளரின் நிதி சுற்றறிக்கை	உடைந்த துண்டுகளாக விற்றுத்தீர்ப்பதற்காக இனங் காணப்படுகின்ற வாகனங்களை விற்றுத் தீர்ப்ப தாயின் அந்த வாகனங்களின் பதிவினை இரத்துச் செய்வதற்கு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் 105 வாகனங்களுக்குரிய ஏலமிட்டதன் பின்னர் இதுவரையும் பதிவை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கை ஆலோசனை யின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	**ஏனைய சுற்றறிக்கை**			
(i)	2012 யூலை 11 ஆந் திகதி இலக்கம் W/LPD/01 என்ற மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை.	கடமை நேரத்தில் கூட்டங்கள் நடாத்தப்பட ரூபா 1,797,000 கூட்டப்படி செலுத்தப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் அலுவலக நேரத்தின் பின்னர் கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சட்டத்திற்கு முரணான கொடுப்பனவுகள் மீள அறவிடப்படல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,996,743,075 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,940,432,774 ஆகும்.

2.2 நிதிக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	சபையினால் பேணிச் செல்லப்படுகின்ற 03 நடைமுறைக் கணக்குகளுக்குரிய ரூபா 9,402,935 ஆன நேர் அல்லது பிழையான செலவு வைத்தலும், 02 நடைமுறைக் கணக்குகளுக்குரிய ரூபா 4,826,010 ஆன நேர் அல்லது பிழையான வருவு வைத்தலையும்	வங்கி இணக்கக் கூற்றின் மூலம் தீரத்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நேர் அல்லது பிழையான வரவு வைத்தல் மற்றும் செலவு வைத்தல்களை இனங்கண்டு விரைவாக தீர்த்து வைப்பதற்கு

	இனங்கண்டு தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.		நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மக்கள் வங்கியில் பேணிச் செல்லப்படுகின்ற 03 நடைமுறைக் கணக்குகளில் காசேட்டின் பிரகாரம் 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் பிரகாரம் காசு மீதிகளுக் கிடையே ரூபா 20,729,138 வேறுபாடு காணப்பட்டது.	வேறுபாட்டிற்கான காரணங்களை காரணங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளமை யால் 2025 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும்.	ஆண்டின் இறுதி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரியான தகவல்கள் அடிப்படையாகக் கொள்ளப்படல் வேண்டும்.

2.3 வருமான நிர்வாகம்

2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகர ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்
i.	ஆதன வரியும் வரியும்	8,530.7	5,875.3	5,363.7	4,429.5	7,366.5	5,430.3	5,565.7	4,492.1
ii.	வாடகை	330.5	240.0	269.7	300.8	319.8	309.2	226.6	1,235.1
iii.	அனுமதிப்பத்திரக் கட்டணம்	5,541.7	23.6	4,891.7	2,701.4	126.3	162.2	98.6	4.5
iv.	ஏனைய வருமானம்	713.0	57.3	214.6	10,237.3	2,714.6	2,093.8	1,841.3	4,438.1
	மொத்தம்	15,115.9	6,196.2	10,739.7	17,669.0	10,527.2	7,995.5	7,732.2	10,179.8

2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)(i)	2024 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 4,414,636,366 ஆன ஆதனவரி நிலுவைத் தொகையில் மீளாய்வாண்டில் ரூபா 1,134,906,711 மாத்திரம் அறவிடப்பட்டமையால்	பொதுவாக எடுக்கப்பட்ட முன்னைய ஆண்டினை விட அறவிடல் சதவீதம்	மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்

	அறவிடலின் செயல்முன்னேற்றம் 26 சதவீதம் மாத்திரம் ஆகும். அதன் பிரகாரம் ஆதனவரி நிலுவையின் பணத்தை அறவிடுதல் மிகவும் நலிவான மட்டத்தில் காணப்பட்டதுடன் மீளாய் வாண்டிற்குரிய ஆதனவரி நிலுவை ரூபா 905,831,275 ஆன மையால் ஆதனவரி நிலுவைத் தொகை அதகரித்து செல்லும் போக்கு காணப்பட்டது. முன்னைய ஆண்டுகளில் நிலுவை காணப்பட்ட போது மீளாய்வாண்டின் ஆதனவரி செலுத்துவதற்கு அனுமதி வழங்கியிருந்த போதும் நிலுவைப் பணம் அதிகரித்துச் செல்வதற்கு காரணமாக இருந்தது.	0.3 சதவீதமான சிறிய அதிகரிப்பாகும்.	பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அரசாங்கத்தின் ஆதனங்கள் 5945 ஆக இருந்ததுடன் அதற்குரிய நிலுவை ஆதனவரித் தொகை ரூபா 714,735,781 ஆகும். அந்த நிலுவைத் தொகையை செலுத்த வேண்டிய அரசாங்க நிறுவனங் கள் எவை என்பது தொடர்பான தகவல்கள் கணனிமுறைமையில் காணப் படாதிருந்ததுடன் ஆதனவரி அறிவித்தல் மற்றும் யாருக்கு கையளிக்கப்பட்டது என்பது பிரச்சினைக்குரியதாக இருந்தது. கணனி முறைமையில் செலுத்தப்பட்ட தொகையை நாளதுவரையாக்கி நிலுவைப் பணம் செலுத்துதல் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் கொடுப்பனவு செய்த நிறுவனம் எவை யென முறைமையில் வெளிப்படுத்தப்படவில்லை.	அரசாங்கத்தின் ஆதனங்கள் தொடர்பான தகவல்கள் கணனி முறைமையின் மூலம் பெற முடியும்.	சரியான தகவல்களின் அடிப்படையில் மாத்திரம் ஆதனவரித் தொகை கையேற்றல் தொடர்பாக வங்கியுடன் உடன்படிக்கை செய்து இணக்கப் பாட்டிற்கு வருதல் வேண்டும்.
(iii)	ஆதன உரிமையாளர்களினால் உரிய வங்கியின் மூலம் ஆதனவரி செலுத்தப் பட்டிருந்த போதிலும் அதனை சரியான சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யா மையின் காரணமாக தொடர்ந்தும் நிலுவை மீதி காண்பிக்கப்படுகின்றமை யால் நகர திறைசேரியினால் ஆதனவரி செலுத்தாது புறக்கணித்தமைக்கு எதிராக எடுக்கப்படுகின்ற நடவடிக்கை களில் ஆதனவரி செலுத்திய நபர்களும் உள்ளடங்குவதற்கு இடமளிக்கப்பட்டி ருந்தது.	வருடாந்தம் தொங்கல் கணக்கின் மீதி குறை வடைந்து காணப்படு கின்றது.	வங்கியின் மூலம் ஆதன வரி செலுத்தும் விபரங்களின் பிரகாரம் மாநகர சபையின் தகவல் முறைமைமைய நாளதுவரையாக்குவ தற்கு தேவையான நடவக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	வாடகை வருமானத்தில் உள்ளடக்கப் பட்ட பிரதான கூறான நடைபாதைக் கடைகளுக்காக கணக்கீடு செய்ய வேண்டிய வருமானம் ரூபா 142,619,981 ஆனமையால் மதிப்பீடு செய்யப்பட்ட	நடைபாதை கடைகளுக்கு சென்று வாடகை அறவிடுவதற்கு போதியளவான வருமான	ஆண்டில் சிட்டையிடப்படுகின்ற வருமத்தை ஆண்டின் போதே சேகரிப் பதற்கு தேவை யான

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
	நடைபாதை கடை வருமானம் ஆன ரூபா 104,000,000 இற்கு மேற்பட்ட அதாவது 37.13 சதவீதம் அதிகரிப்பாகும். மேலும் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 77,722,430 ஆகக் காணப்பட்டது. ஆண்டின் ஆரம்பத்தில் ரூபா 665,040,434 ஆன நடைபாதை கடை நிலுவைப் பணம் 2024 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 729,980,358 வரை அதிகரித்திருந்தது.	உத்தியோகத்தர்கள் காணப்படவில்லை.	சகல நடவடிக்கைகளும் எடுத்தல் வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டிற்காக அனுமதிப் பத்திரக் கட்டண வருமனம் ரூபா 76,334,098 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் ரூபா 53,269,000 ஆன அனுமதிப்பத்திரக் கட்டண வருமானத்தை விட ரூபா 23,065,098 அதாவது 43 சதவீத அதிகரிப்பை கைபெற்றப்பட்டிருந்த போதும் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 247(அ) I பிரிவின் பிரகாரம் இந்த சட்டத்தின் அல்லது கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற உப விதிகள் அல்லது விபரங்கள் உள்ள பணிகளுக்காக நிலையம் ஒன்றை பயன்படுத்துவதற்கு அதிகாரம் வழங்க வேண்டியிருந்த போதிலும் உப விதிகள் அங்கீகரித்துக் கொள்ளாமல் விதிகளுக்கு முரணாக அனுமதிப் பத்திரம் விநியோகித்து கட்டணம் அறவிடப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டது.	எதிர்காலத்தில் உப விதிகள் தயாரிக்கப் படாமையினால் சகல வியாபார பணிகளுக் காகவும் உப விதிகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்து சட்ட விதிகளுக்கு முரணில்லாத வகையில் வியாபார அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் ஏனைய நிருவாக அதிகாரத்தின் கீழ் நிருவகிக் கப்படாமல் சகல வியாபார வகைகளுக்காகவும் உப விதிகளை அங்கீகரித்து ஒழுங்குபடுத்தி அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	கொழும்பு நகரத்தில் சராசரி மழை காலத்தின் போது நீரில் மூழ்குகின்ற 20 இடங்கள் அளவில் மாநகர சபையினால் இனங்காணப்பட்டிருந்தது. அதனிடையே 13 இடங்களை அபிவிருத்தி செய்வதற்காக ஒப்பந்தம் கையளிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டில் 03 ஒப்பந்தங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந் தது. 07 இடங்கள் தொடர்பாக இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம்.	இனங்காணப் பட்ட இடங்கள் தொடர்பான தீர்வினை வழங்குதலை துரிதப்படுத்துதல் வேண்டும்.

(ஆ)	உலக வங்கியின் கடன் உதவியின் மூலம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு உட்துறை அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்ட கொழும்பு நகரம் சார்ந்த நகர அபிவிருத்தி செயற்திட்டம் மூலம் நொரிஸ் வாய்க்கால் அபிவிருத்தி செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன் மூலம் நொரிஸ் வாய்க்காலுக்கு சேருகின்ற மழை நீர் விரைவாக பேரே வேவெயிற்கு வடிந்து செல்வதற்காக ஆனோல் ரத்நாயக்க மாவத்தையின் ஊடாக டீ.பீ. ஜாயா மாவத்தை ஊடாக 632 மீற்றரை உடைய புதிய வாய்க்கால் வழியொன்றை நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்ட போதும் கொழும்பு மாநகர சபைக்குரிய 36 வீடுகளை உடைய உடைந்த வீட்டு கட்டிடத் தொகுதியின் காரணமாகவும் ஒப்பந்தந் தைப் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. எஞ்சியிருந்த 105 மீற்றரில் வாய்க்கால் வழியினைப் பூர்த்தி செய்வதற்காக கடந்த ஆண்டின் போது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத்துறை அமைச்சின் கீழ் ரூபா 150 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டி ருந்த போதிலும் குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகளை துரிதப்படுத்தாமையின் காரணமாக கொழும்பு மாநகர சபைக்கு அந்த நிதியினை பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தமையால் மருதானை டீன்ஸ் வீதி மழைநீர் வழிந்தோடிச் செல்வதைத் தடுப்பதற்கு முடியாதிருந்தது.	இந்தக் காணியைக் கையேற்பதற்கு அமைச்சசரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அனுப்பப்பட்டுள்ளது.	செயற் திட்டத்தின் நிர்மாண நடவடிக்கை களை பூர்த்தி செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	கொழும்பு மாநகர சபையின் ஆதனவரி மற்றும் வரி அனுமதிப்பத்திரக் கட்டணம் தவிர வாடகை மற்றும் மோட்டார் வாகன தரித்து வைத்தல் கட்டணம், அறிவித்தல் பதாதைக் கட்டண வருமானம் போன்ற வருமானங் களை அறவிடுவதற்காக செலுத்த வேண்டிய நபர்களுக்கு பட்டியல் மூலம் சிட்டையிடல் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. இதனால் செலுத்த வேண்டிய நபர்கள் செலுத்தியமை தொடர்பாக அறிவிக்காமை நடைமுறை ரீதியில் வருமான சிட்டையிடப்படாமை மற்றும் தரவு முறைமை நாளதுவரையாக்கப் படாமையினால் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் கைவிடப்பட்டிருந்தது.	MCAS முறைமையை அபிவிருத்தி செய்து எதிர்வரும் ஆண்டின் போது வருமானத்தை சிட்டையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வருமான சிட்டையிடல் சரியாக அமுல்படுத்த வேண்டியிருந்ததுடன் அதற்காக செலுத்த வேண்டிய நபர்களுக்கு செலுத்த வேண்டிய திகதிக்கு முன் பட்டியல் விநியோகித்தல் வேண்டும். மேலும் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	கொழும்பு நகரத்தில் உள்ள இறுதிச் சடங்கு மண்டபங்கள் மற்றும் இறுதிச் சடங்கு பொறுப்புதாரர்கள் தொடர்பான விதியொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே 1989 சனவரி 20 ஆந் திகதிய இலக்கம் 541/17 என்ற அதிவிசேட வர்த்தமானியில் பகிரங்கப்படுத்தப்பட்ட ஏற்றுக்கொள் ளப்பட்ட உப விதிக்கோவையின் IL, III பகுதியின் கீழ் குறிப்பிடப்பட்ட இறுதிச் சடங்கு மண்டபங்கள் மற்றும் இறுதிச் சடங்கு நடவடிக்கைகளின் பொறுப்பாளர்கள் தொடர்பாக உள்ள அங்கீகரிக்கப் பட்ட விதிகள் முக்கியத்துவம் வாய்ந்ததாக கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. இதன் காரணமாக விடயப் பொறுப்பு உத்தியோகத்தரின் விருப்பத்தின் பிரகாரம் அந்த விடயங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தது.	எதிர்வரும் 02 மாத காலத்தில் கண்டறிந்து உப விதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படும்.	புதிய விதியொன்றை அங்கீகரித்துக் கொள்வதற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட விதியை பின்பற்றுவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	கொழும்பு மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் மனித உடல்களை எம்பாம் செய்தல்/ பதப்படுத்தும் தொழிலுக்காக (எம்பாம் செய்தல்) 2024 ஆம் ஆண்டில் 02 அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக் கப்பட்டிருந்தது. 2023 நவம்பர் 17 ஆந் திகதிய இலக்கம் 2359 என்ற இலங்கை சனநாய சோலிஷ குடியரசின் வர்த்தமானியில் பகிரங்கப்படுத்தப்பட்ட கொழும்பு மாநகர சபையின் அனுமதிப்பத்திரம் மற்றும் அறவிடல் அறிவித்தலின் 150 ஆவது விடயத்தின் கீழ் மனித உடல்கள் வைத்தல் / தயாரித்தல் செயற்திட்டம் நடாத்திச் செல்வதில் உள்ளடக்கப்பட்டிருந்த போதும் அது மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 247அ (2) பிரிவில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு முரணாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.	முறையாகப் பரீட்சித்து மிகுதி நடவடிக்கை எடுக்கப்படும்.	மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்து உப விதியொன்றை அங்கீரித்து அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்படல் வேண்டும்.
(ஈ)	2023 நவம்பர் 17 ஆந் திகதிய இலக்கம் 2359 என்ற இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் வர்த்தமானியின் 149 ஆவது விடயத்தின் கீழ் பகிரங்கப்படுத்தப்பட்ட இறுதிச் சடங்கு மண்டபங்கள் நடாத்திச் செல்வதற்காக அனுமதிப் பத்திரக் கட்டணம் தீர்மானிக்கப்பட் டிருந்த போதும் அந்த தீர்மானங்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 247 அ (2) பிரிவிற்கு முரணானது ஆகும். மாநகர சபைகள்	சட்ட ரீதியான முறையில் உப விதிகளை தயாரித்து அங்கீகரித்ததன் பின்னர் அனுமதிப் பத்திரக் கட்டணம் மற்றும் வியாபார அனுமதிப் பத்திரங்களை விநியோகிப்பதற்கு எதிர்காலத்தில்	உப விதிகளை அங்கீகரித்துக் கொண்டதன் பின்னர் அனுமதிப் பத்திரம் அங்கீகரிக்காமல் அனுமதிப்பத்திரம் விநியோகிக்காதிருத் தல் வேண்டும்.

	அதிகாரப் பிரதேசத்தில் இறுதிச் சடங்கு மண்டபத்தை நடாத்திச் செல்வதற்காக உப விதியொன்று இன்றி 2024 ஆம் ஆண்டிற்காக 04 நிறுவனங்களுக்கு அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப் பட்டிருந்தது.	நடவடிக்கை எடுக்கப்படும்.	
(உ)	2022 திசம்பர் 27 ஆம் திகதிய இலக்கம் 3449 என்ற பொதுச் சபையின் தீர்மானம் மற்றும் 2023 ஒக்டோபர் 03 ஆந் திகதிய இலக்கம் 310 மற்றும் 2024 மார்ச் 05 ஆம் திகதிய இலக்கம் 593 என்ற நகர ஆணையாளரின் தீர்மானத்தின் மூலம் மயான நில கட்டிடங்களை திருத்தப்பட்டிருந்த போதிலும் அந்தக் கட்டணம் 1946 இன் 57 ஆம் இலக்க பொது மயானங்கள் மற்றும் தனியார் மயான நிலங்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் பிரகாரம் ஆளுநரின் வர்த்த மானியில் பிரசுரிக்க வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் மாநகர சபையினால் மயான நிலக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.	காலம் தாழ்த்தி வைப்பதில் திட்டம் முறைமைகளில் வேறுபாட்டின் காரணமாக வருமானம் குறைவடைந்துள்ள மையால் உரிய திட்ட முறையின் கீழ் கட்டணம் அறவிடப் பட்டுள்ளது.	மயான நில கட்டிடங்கள் திருத்த வர்த்தமானி யில் பிரசுரிக்கப்பட்ட கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	1946 இன் 57 ஆம் இலக்க பொது மயானங்கள் மற்றும் தனியார் மயான நிலங்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 23 ஆம் பிரிவிற்கு முரணாக 1980 ஆம் ஆண்டு முதல் நிலத்தில் அடக்கம் செய்யும் நடவடிக்கைகளுக்காக மயான நிலத்தின் நிலக்கூறுகளை ஒதுக்கிவைத்தல் முழுமையாக நிறுத்தப்பட்டதுடன் நினைவுத்தூபி ஸ்தாபிப்பதற்காக 2’x2’ அளவில் நிலப் பகுதி ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் இதற்காக மயான நிலங்கள் கட்டளைச் சட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட பிரகாரம் விற்பனை செய்யப்படுகின்ற பகுதி தொடர்பாக வரைபடம் அல்லது ஆவணங்கள் பேணிச் செல்லுதல் நலிவான நிலையில் காணப்பட்டது. பொரள்ள மயான நிலத்தில் மனித உடல் குழிகள் மற்றும் தூபிகளுக்காக ஒதுக்குதல் தொடர்பாக வரைபடம் ஒன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதி ருந்ததுடன் மயான நில அலுவலகத் திலும் அவ்வாறான விடயமொன்று காணப்படவில்லை. 2020 திசம்பர் 31 இல் உள்ளவாறு வருடாந்த மெய்மை ஆய்வு அறிக்கையின் மூலம் காணப்பட்ட வரைபடம் தொலைந்து போய் இருந்ததாக வெளிப்படுத்தப்பட்டிருந்த	தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வரை படத்தை வரைவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப் படுவதுடன் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆவணங்கள் அச்சிடப் பட்ட படிவம் இல்லாதிருந்தமையால் சீஆர் புத்தகத்தில் பதியப்பட்டதுடன் மயான நிலத்தில் காணப்படுகின்ற வரைபடம் உக்கி இருந்தமையால் வரைபடத்தை எதிர் காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சகல இடங்களும் வரைபடமாக்கப்பட்டு தொடர்ந்தும் முறை யற்ற வகையில் பயன்படுத்துதலைத் தவிர்த்தல் வேண்டும்.

	போதிலும் அது தொடர்பாக சபையும் முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		
(எ)	பொரளை மயான நிலத்தில் 2'x2' அளவான தூபியொன்றை நிர்மாணிப்பதற்காக நில அளவொன்றை ஒதுக்கிக் கொள்வதற்கான கட்டணம் ரூபா 500,000 ஆக இருந்ததுடன் 2024 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டில் 12 தூபிகளுக்காக கட்டணம் அறவிடப் பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் போதும் அந்த தூபிகள் யாருடையது என மயான நிலக் கட்டுப்பாட்டாளருக்கு தெரியாதிருந்தது. அதன் பிரகாரம் நிலக் கூறுகளை பயன்படுத்தும் போது ஏற்படக்கூடிய மோசடிகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	12 நினைவுத் தூபிகள் இது வரை கணனி மயப்படுத்தப்பட்டுள்ள துடன் எதிர்காலத்தில் இந்த இடங்களை வரைபடத்தில் குறிப்பிடுவதற்கு எதிர் பார்க்கப்பட்டுள்ளது.	ஆவணங்களைப் பேணிச்செல்லல் உரிய பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஏ)	1946 இன் 57 ஆம் இலக்க பொது மயான நிலங்கள் மற்றும் தனியார் மயான நிலங்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம் சகல கையளிக் கப்படுகின்ற மனித உடல்களும் குறிப்பிடப்படுகின்ற பதிவேடொன்று மயான நிலையப் பொறுப்பாளரால் வைக்க வேண்டியிருந்ததுடன் அந்த மனித உடல்கள் வழங்கப்பட்ட திகதி, அது தொடர்பான தரப்பினர், அது தொடர்பான விபரங்கள் தொடர்பான நிதி அறவிட்டவரின் பெயர், கையளித்த உடல்களின் விபரங்களை உள்ளடக்கிய நிலத்தை இனங்காண்பதற்குரிய விரிவான முறைமையொன்றும் அது தொடர்பாக பேணிச் செல்லப்படுகின்ற விபரங்களை உள்ளடக்கி நினைவுத் தூபி குறிப்புக்கள் மற்றும் மேற்கூறப்பட்ட மனித உடல்கள் வழங்கப்பட்டு 14 நாட்களுக்குள் மயான நிலக் கட்டுப் பாட்டாளரால் பதிவேட்டில் குறிப்பிடல் வேண்டும். எனினும் 03 மாயான நிலங்களுக்காக அவ்வாறு முழுமையான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. சகல மயான நிலங்களிலும் விற்பனை செய்யப்பட்ட நிலக்கூறுகளை இனங் கண்டு அவற்றை பேணிச் செல்வதற்கு சட்ட ரீதியில் இல்லாத சகல நிர்மாணங்களும் 1946 இன் 57 ஆம் இலக்க பொது மயானங்கள் மற்றும் தனியார் மயான நிலங்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின்	அச்சிடப்பட்ட பதிவேடு இல்லாதிருந்ததன் அடிப்படையில் சீஆர் புத்தகத்தின் மூலம் தகவல்கள் பதியப் பட்டுள்ளது.	1946 இன் 57 ஆம் இலக்க பொது மயான நிலச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

பிரகாரம் அகற்றுதல் தேவை தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்க வில்லை.

3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	கொழும்பு நகரத்தில் மோட்டார் வாகன தரிப்பிட நிலையங்கள் 30 இனது ஒப்பந்த காலம் முடிவடைந்ததன் காரணமாக அந்த இடங்களை குறுகியகால வாடகை அடிப்படையில் வரையறுக்கப்பட்ட கூறுவிலை கோரி வழங்கப்பட்டதுடன் கூறுவிலை சமர்ப்பிக்கும் இறுதித் திகதி 2023 யூன் 15 ஆம் திகதியாகும். அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
(i)	ஏனைய நில இடங்களில் மோட்டார் வாகனங்களை பேணிச் செல்கின்ற ஒப்பந்தகாரர்களுக்கு கூறுவிலை கோரப் பட்டிருக்கும் போது மதிப்பீட்டைத் தீர்மானித்து ஒப்பந்தகாரருக்கு கையளிப் பதற்கு தாமதம் அடைந்ததன் காரணமாக 2023 யூலை 01 ஆந் திகதி முதல் செப்டெம்பர் 30 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் மாநகர சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 18,750,800 வருமானம் இழக்கப்பட்டிருந்தது.	புதிய ஒப்பந்தம் ஆரம்பிக்கப் படும் வரை காணப்பட்ட ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டமையால் நிதி ரீதியான நட்டம் ஏற்படவில்லை.	மாநகர சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழந்தமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ii)	2022 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய இலக்கம் 3242 என்ற சபைத் தீர்மானத்தின் பிரகாரம் செலுத்துதல்க ளை புறக்கணிக்காதிருந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கூறுவிலை கோர வேண்டியிருந்த போதும் கூறுவிலை கோரல் பதிவேட்டில் 13 ஆவது பந்தியின் பிரகாரம் மாநகர சபைகளுக்கு கொடுப்பனவுகள் நிலுவையாக காணப்படுகின்ற நிறுவன ஒப்பந்தகாரர்களுக்கு கையளிப்பதற்கு பொருத்தமில்லாதிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்த போதும் 2023 திசம்பர் 31 ஆம் திகதிய கூட்டுமொத்தமாக ரூபா 141,344,056 நிலுவைத் தொகையுடன் உள்ள ஒப்பந்தகாரர்கள் ஏழு பேர் தெரிவு செய்யப்பட்டு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.	நகர ஆணையாளரின் தீர்மானத்தின் பிரகாரம் நிலுவைத் தொகையின் ஒரு பகுதியை செலுத்தும் அடிப்படையில் ஒப்ப்நதம் கையளிக்கப் பட்ருந்தது.	கூறுவிலை கோரும் பதிவேட்டில் நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	சபைத் தீர்மானம் மற்றும் கூறுவிலை கோரல் பதிவேட்டின் 12 ஆவது பந்தியின் பிரகாரம் தற்போது வாகன தரிப்பிடல் ஒப்பந்தங்களுக்காக உடன் படிக்கை செய்துள்ள ஒப்பந்தகாரர்கள் மாத்திரம் கூறுவிலை கோர வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக புதிய 07 நிறுவனங்களில்	ஒப்பந்தகாரர்கள் அதிகரிக்கின்ற அளவிற்கு சபைக்கு ஏற்படுகின்ற நலன்கள் அதிகரிக்கின்ற சந்தர்ப்பங்கள்	சபைக்கு மிகவும் நலன் வாய்ந்த கேள்விகளை கோருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	கூறுவிலை பெறப்பட்டு அதில் 03 நிறுவனங்களுக்கு ஒப்பந்தம் கையளிக் கப்பட்டிருந்தது.	கவனத் திற்கொள்ளப்பட்டது.	
(ஆ)	கொழும்பு நகரத்தில் சுகுரு (LED) விளக்கு செயற்திட்டம் மாநகர சபையின் செலவினம் இன்றிய செயற்திட்டமாக ஆரம்பிக்கப்பட்ட போதிலும் மாநகர சபையினால் பராமரிப்பு செலவினமாக ரூபா 1,478 மில்லியனும் செலுத்துவதற்கு இணக்கப்பாடொன்றை வழங்குதல் ஆரம்ப நோக்கத்திற்கு முரணானதாகும். இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
(i)	இலங்கையின் பிரதான பொருளாதார வலயமாக நாட்டின் பிரதான பொருளாதார முறைமை அமுல்படுத்தப் படுகின்ற மாநகர சபை எல்லையில் சனாதிபதி மாளிகை, அலரி மாளிகை, மத்திய வங்கி, பொதுத் திறைசேரியை உள்ளடக்கிய பிரதான நிறுவனங்களை உள்ளடக்கி இராஜதந்திர நிறுவனங்களின் பாதுகாப்பு தொடர்பாகவும் போதியளவான உறுதிப்படுத்தல் பெற்றுக் கொள்ளப்படாமல் கொழும்பு நகரத்தில் சுகுரு விளக்குகளுடன் அதில் தொழில்நுட்ப தொகுதிகளை பொருத்துவதற்கு உடன்ப டிக்கை செய்தமை சர்ச்சிசைக்குரிய விடயமாக இருந்தது.	தற்போது வரையில் உரிய பிரகாரம் முன் அங்கீகாரம் பெறப் பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	உடன்படிக்கையை மீண்டும் மீளாய்வு செய்து தேவையான மிகுதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	கேள்வி மதிப்பீட்டின் போது தனியார் கம்பனி சுட்டிக்காட்டியிருந்த இணைக்கப்பட்ட 03 நிறுவனங்களுக்கு கூட்டுமொத் தமாக ரூபா 700 மில்லியனுக்கு சமமான கிரயம் ஒன்று ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்த போதிலும் தாய்க் கம்பனி அல்லது இணைந்த கம்பனி யார் என இனங்காணப்பட்டிருக்கவில்லை. நிறுவனம் சமர்ப்பித்த கேள்வி பிணை முறியின் காலம் போதியளவில் இல்லாமையின் அடிப்படையில் நிராகரிக்கப்பட்டு ரூபா 6,444 மில்லியனால் அதிகரித்து முதலீடு முன்மொழிவு கைவிடப்பட்டமையால் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு எதிர்பார்த்த நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.	கேள்விதாரருடன் இணைந்த கம்பனி நான்கு ஒன்றிணைக் கப்பட்டு ரூபா 700 மில்லியன் கிரயம் காண்பிக்கப்பட்டுள் ளது.	மீண்டும் இவ்வாறான நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் வழங்குதல் வேண்டும்.
(iii)	தெரிவு செய்யப்பட்ட தனியார் கம்பனி சமர்ப்பித்த காசுப்பாய்ச்சலின் பிரகாரம் முதல் 04 வருடத்தில் ரூபா 700 மில்லியன் முதலீடு காணப்பட்டதாக வெளியிட்ட முதலீட்டு	பங்கு உரிமையாளர் களின் முதலீடாக ரூபா 700 மில்லியன் தொகை 04 வருட	மாநகர சபைக்கு பாதகமான நிலைமை ஏற்படாமல்

	பெறுமதியில் 70 மடங்காக இருந்ததன் காரணமாகவும், மதிப்பீடு சமர்ப்பித்த அதற்குரிய கம்பனி தனது சொத்துக்கள் தனியார் வங்கிக்கு அடகுவைத்து ரூபா 15 மில்லியன் கடன் தொகை பெறப்பட்டதன் காரணமாக அந்தக் கம்பனியின் தொகுதியாக ரூபா 2,500 மில்லியன் முதலீடு செய்வதற்கு நிதி இயலுமை காணப்படாதிருந்த போது ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.	காலத்தில் பெற்றுக் கொள்வதற்கு போதியளவான சொத்துக்களும் காணப்படுவதாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் உறுதிப்படுத் தப்பட்டுள்ளது.	இருப்பதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படல் வேண்டும்.
(iv)	இந்த செயற்திட்டத்தின் கீழ் தற்போது காணப்படுகின்ற மின்சார குமிழ் தூண்களின் விளக்குகளுக்கு பதிலாக அதிக தொழில்நுட்ப எல்.ஈ.டீ மின் குமிழ் பொருத்துதல் பிரதான அங்கமாக இருந்தது. ஒப்பந்த கம்பனியால் விளக்குகள் மாற்றுவதனை உள்ளடக்கி வருடாந்தம் ரூபா 500 மில்லியன் முதலீடு மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டமையால் இந்த முதலீடு கொழும்பு மாநகர சபைக்கு நிறைவேற்றி பெறக்கூடியதாக இருந்த மொத்த நலன்களும் மாநகர சபைக்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் தவறவிடப்பட்டிருந்தது.	வருடாந்தம் ரூபா 500 மில்லியன் தொகையான வீதி விளக்குகளுக்காக முதலீடு செய்வதற்கு மாநகர சபைக்கு நிதி ஏற்படாதிருந்ததன் அடிப்படையில் அரச மற்றும் தனியார் கூட்டு முயற்சி ஆரம்பித்தல் அங்கீகரிக்கப்பட்டிருந் தது.	மாநகர சபைக்கு பாதகம் ஏற்படாத வகையில் இருப்பதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படல் வேண்டும்.
(v)	திருத்தப்பட்ட உடன்படிக்கையின் 1(a) மற்றும் (b) மூலம் சபையின் விளம்பர உரித்தை ஒப்பந்தகாரருக்கு கையளிக் கும் போது தற்போதும் மாநகர சபை யினால் சந்தர்ப்பங்களை கவனத்திற் கொள்ளப்பட்டுள்ள தனியார் இடங்கள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய முறை கேடுகளுடனான செயற்பாடுகளை சரிசெய்யப்படும் வரை சபையினால் மிகைக்கட்டணத்தை விதிப்பதற்கு ஒப்பந்தகாரருக்கு அதிகாரம் வழங்கப் பட்டமை மாநகர சபைக்கு பாதகமான நிபந்தனையாகும்.	மூன்றாவது தரப்பினர் மூலம் மேற்கொள்ளப் படுகின்ற LED மற்றும் Digital அறிவித்தலுக்காக மாத்திரம் விளம்பர எல்லை விதிக்கப்பட்ட துடன் எனைய அறிவித்தல் விளம்பரங்களுக்காக வரையறைகள் விதிக் கப்படவில்லை.	மாநகர சபைக்கு நலன் வாய்ந்த நிலைமை யொன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கு கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.
(இ)	புத்தகங்களை பகிர்ந்தளிக்கும் பணிகளுக்காக தனியார் நிறுவனத்தில் இருந்து உணவுகளைக் கொள்வனவு செய்வதற்கு போலியாக தயாரிக்கப்பட்ட 17 பட்டியல்கள் சமர்ப்பித்து ரூபா 2,342,110 செலுத்தப்பட்டமை தொடர்பாக எந்தவொரு பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	இரகசிய அறிக்கை மூலம் 17 பட்டியல்கள் சரியாக இருந்ததாக வளங்குனர் நிறுவனத்திற்கு கிடைக்கப் பெற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளது.	இது தொடர்பாக ஆரம்ப விசாரணைகள் நடாத்தப்படல் வேண்டும்.

(ஈ)	குறைந்த வருமானம் பெறுவோர்களுக்காக சலுகை வழங்குவதற்காக மாநகர சபையின் புண்ணிய ஆணையாளர் பதவி ஏற்படுத்தப்பட்டு 215 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருடனும் நடாத்திச் செல்லப்படுகின்ற பொதுமக்கள் உதவி திணைக்களத்தின் சராசரி கடமைகளின் கீழ் 2023 ஆம் ஆண்டில் பாடசாலைப் புத்தகங்களை பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற உதவி நிகழ்ச்சித் திட்டங்களுக் கும் உரியதாகும். அந்த நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பங்குபெற்றிய உத்தியோகத்தர்களுக்கு மற்றும் ஊழியவர்களுக்கும் உபசரிப்புகளுக்காக ரூபா 2,956,624 செலவிடப்பட்டிருந்த போதும் பங்குபற்றிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் தொடர்பான வருகைப் பதிவேடோ அல்லது பங்குபற்றியதை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களோ பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் இவ்வாறான செலவினங்களைச் செய்தல் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 188(1) ஆம் பிரிவின் கீழ் சந்தர்ப்பம் வழங்க முடியாதிருந்த செலவினங்கள் ஆகும்.	நகர ஆணையாளரின் மற்றும் புன்னிய ஆணையாளரின் அங்கீகாரத்தின் பிரகாரம் சட்டத்தின் 188 ஆம் பிரிவின் பிரகாரம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள் ளது.	மாநகர சபைகள் நிதியத்தை செலவிடும் போது சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டி யிருந்ததுடன் சான்றுகள் மூலம் உறுதிப் படுத்தலும் வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	பொருள் மெய்மையாய்வு சபை அறிக்கையின் பிரகாரம் நகர செயலாளர் திணைக்களத்தின் பொருட் பதிவேட்டின் படி அச்சிடல் இயந்திரங்களின் எண்ணிக்கை 51 ஆக இருந்தமை காண்பிக்கப்பட்ட போதும் பௌதீக பரிசோதனையின் போது நிற அச்சிடல் இயந்திரங்களுடன் 63 அச்சிடல் இயந்திரங்கள் காணப்பட்டது.	தற்போது பொருட் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்பட் டுள்ளது.	மாநகர சபையின் சகல பிரிவுகளிலும் பொருள் மெய்மை ஆய்வு நடவடிக்கைகள் சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஆ)	நகர செயலாளர் திணைக்களத்தின் அச்சிடல் இயந்திரங்கள் 15 மற்றும் நிழற்படப் பிரதி இணந்திரங்கள் 05 சிறிய அல்லது பாரியளவான குறைபாடுகளின் காரணமாக பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன் அந்த இயந்திரங்களை சேவை இடுவதற்கான முறைமையொன்று காணப்படாதிருந்தமை யால் பயன்பாட்டில் இருந்து அகற்றும் நிலைமை ஏற்பட்டிருந்தது.	அச்சிடல் இயந்திரங்கள் தொடர்பான தரத்தினை பரிசோதனை செய்து உடன்படிக்கை ஊடாக சேவையினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்படல் வேண்டும்.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(இ)	பிரதி நகர ஆணையாளர் அலுவலகம் மற்றும் உபசரிப்பு விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு ரூபா 552,740 பெறுமதியான 14 வர்ண டோனர் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அந்த வர்ண டோனர் எந்த கடமைகளுக்காக பயன்படுத்தப்பட்டது என உறுதிப்படுத்தப்பட வில்லை.	நகர செயலாளர் திணைக்களத்தின் பல்வேறு வர்ண அச்சிடல் தேவை களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள து.	செலவினங்கள் கட்டுப்படுத்த வேண்டியிருந்ததுடன் டோனர் பயன்பாடு தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துதல் வேண்டும்.

3.5 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	பல்நோக்கு அபிவிருத்தி உதவியாக பயிற்சிக ளுக்காக சேர்க்கப்பட்டவர்களுக்கிடையே 2023 யூன் 01 ஆம் திகதி முதல் அமுல்படும் வகையில் மேல் மாகாண அரசாங்க சேவையில் வேலைக்கள தொழிலாளர் பதவிகளுக்காக மேல் மாகாண பிரதம செயலாளரால் நியமனம் வழங்கப்பட்டு கொழும்பு மாநகர சபைக்கு நியமிக்கப்பட்ட 37 தொழிலாளர்களுக்கு கொழும்பு மாநகர சபையின் சேவையில் ஈடுபடுத்தப்படாமல் மேல் மாகாண சபைக்குரிய ஏனைய அலுவலகங்களுக்கு நியமிக்கப்பட்டு கொழும்பு மாநகர சபையில் இருந்து சம்பளமாக கூட்டுமொத்தமாக ரூபா 17,898,823 தொகை 2024 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் செலுத்தப்பட்டிருந்தது.	மேல் மாகாண கௌரவ ஆளுநரின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	மாநகர சபை ஊழியர்கள் ஏனைய நிறுவத்திற்கு நியமித்தல் மற்றும் மாநகர சபையில் இருந்து அவர்களுக்கு சம்பளம் செலுத்துதலை சரிசெய்தல் வேண்டும்.
(ஆ)	மேல் மாகாண அரசாங்க சேவையின் மயான நில பொறுப்பாளர் (விசேட தரம்) பதவியில் ஈடுபட்டிருக்கின்ற கொழும்பு மாநகர சபையின் பொரளை மயான நிலையத்திற்கு நியமிக்கப்பட்டு சேவையாற்றியவர் போலியான சிட்டைகள் வழங்கியதன் காரணமாக அவரின் வேலை 2021 ஏப்ரல் 30 ஆந் திகதி முதல் நகர ஆணையாளரினால் தடை செய்யப்பட்டதுடன் 2023 சனவரி 13 ஆந் திகதிய கடிதம் மூலம் மீண்டும் கடமைகளைப் பொறுப்பேற்பதற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அவர் 2023 சனவரி 23 ஆந் திகதி சேவைக்கு அறிக்கையிட்டிருந்ததுடன் அத் திகதியில் இருந்து 2024 திசம்பர் 31 ஆம் திகதி வரை வேலை செய்த 477 நாட்களுக்கிடையே 90 நாட்கள் மாத்திரம் சேவைக்கு அறிக்கையிடப்பட்டிருந்த போதும் சேவைக்கு அறிக்கையிடாமை தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2025 மார்ச் 04 ஆந் திகதி சேவையை விட்டுச் செல்லும் அறிவித்தல் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	முறையான ஒழுக்காற்று விசாணை விரைவாக மேற்கொள்ளப் படல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) ஆம் மற்றும் 2019 திசம்பர் 24 ஆம் திகதிய இலாக்கம் 2155/6 என்ற வர்த்தமானியின் 8 ஆவது கட்டளையின் பிரகாரம் 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் நிதிக்கூற்றுக்கள் அடுத்துவரும் நிதியாண்டின் பெப்ருவரி 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதும் சபையின் நிதிக்கூற்றுக்கள் 94 நாட்கள் தாமதமாகி 2025 யூன் 03 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	பதிலளிக்கப்படவில்லை.	குறித்துரைத்த திகதிக்கு முன் நிதிக்கூற்றுக் களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உள்ளபடியான வருமானம் ரூபா 15,538,425,829 ஆக இருந்ததுடன் பாதீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 28,744,858,000 ஆனமையால் 46 சதவீத வருமானம் முரண்கள் காணப்பட்டது. கொழும்பு மாநகர சபைக்காக வருமான மதிப்பீடு தயாரிக்கும் போது பொருத்தமான அடிப்படையில் இன்றி வருமான மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக அல்லது மதிப்பீடு நியாயமானதாயின் வருமானத்தை சேகரிப்பதற்கான அதிகாரம் கையளித்த உத்தியோகத்தர்களின் கவனமின்மையின் காரணமாக வருமானத்தை சேகரிப்பதற்கு முடியாதிருந்தமையால் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற் கும் இடையே 10 சதவீதத்திற்கும் மேல் அதிகரித்த வேறுபாடுகள் காணப்பட்டது.	வருமான முரண்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட அரசாங்கத்தின் உதவி மற்றும் ஏனைய உதவிகள் கிடைக்காமையே காரணமாகும்.	மிகவும் பொருத்தமான வருமான மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும்.

4.3 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2024 ஆம் ஆண்டிற்காக உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் 22 விநியோகிக்கப்பட்டதுடன் அதில் 07 அறிக்கைகளுக்காக பதிலளிக்கப்படவில்லை. உள்ளக கணக்காய்வு வழங்கிய பரிந்துரையை உள்ளடக்கிய கணக்காய்வு ஐயவினாக்கள் 22 இற்காகவும் பரிந்துரைகள் அமுல்படுத்தப் பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்பட வில்லை.	கணக்காய்வு ஐயவினாக்களுக்காக குறித்துரைத்த காலத்தில் பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்களின் பரிந்துரையை அமுல்படுத்துவதன் மூலம் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்துதல் வேண்டும்.